DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.103/2023
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 1(LW1)
Defence

Name : Manikandan

Father Name /
Husband Name : Arumugam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 03rd march 2026

எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியை ஆரோவில் காவல் நிலைய பெண் த.காவலர் 2075 திருமதி.மதியழகி என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் ரவுத்தன்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்துவருகிறேன். பட்டியல் சாட்சி ஆறுமுகம் எனது அப்பா. பட்டியல்

சாடசி 3 எனது அம்மா. வழக்கின் எதிரிகள் பிரகாஷ் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். 08.11.2022 அன்று மதியம் 01.00 ் மணிக்கு எனது அப்பா ஆறுமுகம் அச்சரம்பட்டு ் ஏரிக்கரை அருகில் உள்ள விவசாய நிலத்தில் இருந்தார். என் அம்மா விஜயலட்சுமி மற்றும் என் மனைவி கமலி ஆகியோர்களுடன் மேற்படி விவசாய நிலத்தில் களை வெட்டி கொண்டிருந்தார். என் அப்பா காவல் பார்த்து கொண்டிருந்தார். எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் எதிரி பிரகாஷ் நிலம் உள்ளது. மேற்படி பிரகாஷ் நிலத்திலிருந்து வெளிமாடுகளை பிரகாஷீம் வெங்கடேசனும் எங்கள் நிலத்தில் ஓட்டி விட்டார்கள். என் அப்பா மேற்படி மாடுகளை விரட்டும்போது அந்த மாடுகள் அச்சரம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் கணபதி என்பவரை நிலத்திற்கு சென்றது. அந்த நிலத்தை பிரகாஷ் குத்தகைக்கு எடுத்திருந்தார். இதனால் பிரகாஷ் வெங்கடேசன் மற்றும் அப்பாவிற்கு வாய்தகராறு ஏற்பட்டது. பேசிக்கொண்டு இருக்கும்போது தேர்தல் முன்விரோதம் காரணமாக வெங்கடேஷ் பக்கத்தில் உள்ள பெருமாள் என்பவரின் நிலத்திலிருந்து பீர்பாட்டிலை எடுத்து பிரகாஷ் கையில் கொடுத்து அவனை ஓங்கி அடி என்று சொல்லி பிரகாஷீம் வெங்கடேசும் எனது அப்பாவை தெவுடியாபைய என்று ் அசிங்கமாக திட்டி செத்துப்போடா என்று சொல்லி பிரகாஷ் அந்த பீர் பாட்டிலால் என் அப்பாவின் வாயில் அடித்தார். இதில என் அப்பாவின் உதடு கிழிந்து விட்டது. என் அப்பா உயிருக்கு பயந்து அங்கிருந்து ஓடினார். அப்பொழுது வெங்கடேசும் ஒரு தடியை எடுத்து பிரகாஷ் கையில் கொடுத்து அவர் வாயை உடை என்று சொன்னார். பிரகாஷ் அந்த தடியால் என்அப்பாவின் வாயில் அடித்தார். இதில் சம்பவ இடத்திலேயே என் அப்பாவின் வாயிலிருந்து 4 பற்கள் கீழே விழுந்துவிட்டது உடனே என் அப்பா ் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டார். என் மனைவி மதியம் 01.00 மணிக்கு போன் மூலமாக எனக்கு மேற்படி தகவலை சொன்னார். அப்பொழுது நான் பஞ்சவடி அருகே உள்ள பிஸ்கட் கம்பெனியில் இருந்தேன். தகவல் கேள்விபட்டு கார் எடுத்துக்கொணடு சம்பவ இடம் சென்றேன். நான் பார்த்தபோது எனது அப்பா வாயில் அடிபபடடு காயத்துடன் இருந்தார். அவா ் அருகே அவரது நான்கு

பற்கள் கீழே இருந்தது. அங்கு என் அப்பாவை காரில் அழைத்து கொண்டு ஆரோவில் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலீசர் என் அப்பாவை பார்த்து விட்டு உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறியதால் நான் எனது அப்பாவை ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். மருத்துவர்கள் எனது அப்பாவை பரிசோதித்துவிட்டு மேலும் 4 பற்களை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பின்பு இது சம்மந்தமாக ஆரோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.103/2023

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 2 (LW2)
Defence

Name : Arumugam

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 03rd march 2026

எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியை ஆரோவில் காவல் நிலைய பெண் த.காவலர் 2075 திருமதி.மதியழகி என்பவர் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் ரவுத்தன்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். பட்டியல் சாடசி 3 எனது மனைவி பட்டியல் சாட்சி கமலி எனது மருமகள் ஆவார். வழக்கின் எதிரிகள் பிரகாஷ் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். 08.11.2022 அன்று மதியம் 01.00 மணிக்கு நான் அச்சரம்பட்டு ஏரிக்கரை அருகில் உள்ள விவசாய நிலத்தில் இருந்தேன். என் மனைவி விஜயலட்சுமி மற்றும் என் மருமகள் கமலி ஆகியோர்களுடன் மேற்படி விவசாய நிலத்தில் களை வெட்டி கொண்டிருந்தார். நான் காவல் பார்த்து கொண்டிருந்தேன். எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் எதிரி பிரகாஷ் நிலம் உள்ளது. மேற்படி பிரகாஷ் நிலத்திலிருந்து வெளிமாடுகளை பிரகாஷீம் வெங்கடேசனும் எங்கள் நிலத்தில் ஓட்டி விட்டார்கள். நான் மேற்படி மாடுகளை விரட்டும்போது அந்த மாடுகள் அச்சரம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் கணபதி என்பவரை நிலத்திற்கு சென்றது. அந்த நிலத்தை பிரகாஷ் குத்தகைக்கு எடுத்திருந்தார். இதனால் பிரகாஷ் வெங்கடேசன் மற்றும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. பேசிக்கொண்டு இருக்கும்போது வெங்கடேஷ் பக்கத்தில் உள்ள அருகிலிருந்த பீர்பாட்டிலை எடுத்து பிரகாஷ் கையில் கொடுத்து அவனை ஓங்கி அடி என்று சொல்லி பிரகாஷ் அந்த பீர் பாட்டிலால் என் வாயில் அடித்தார். இதில் சம்பவ இடத்திலேயே என் வாயிலிருந்து 4 , 5 பற்கள் கீழே விழுந்துவிட்டது உடனே நான் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். (சாட்சி தன் வாயை திறந்து தனக்கு மேல்வரிசையில் 4 பற்களும கீழ் வரிசையில் 2 பற்களும் விழுந்துவிட்டதாக சாட்சியம அளிக்கிறார்) பின்பு வெங்கடேஷ் ஒரு தடியை எடுத்து பிரகாஷ் கையில் கொடுத்து அந்த தடியால் என் வாயில் அடித்தார். இதில் என் மேல் உதடு கிழிந்து விட்டது. பின்பு தகவல் கேள்விப்பட்டு என் மகன் அசா.1 சம்பவ இடத்திற்கு வந்து என்னை காரில் அழைத்து கொண்டு ஆரோவில் காவல் நிலையத்திற்கு சென்றார். போலீசர் என்னை பார்த்து விட்டு உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறியதால் என் மகன் என்னை

ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்.